### தமிழ்நாட்டில் ஆசிரியர்களுக்கு 'டெட்' தேர்விலிருந்து விலக்கு!

# நாடாளுமன்றத்தில் புதிய சட்டம் கொண்டுவர தி.மு.க. உறுதுணையாக இருக்கும்!

## சட்டப்பேரவையில் தனி தீர்மானத்தின் மீது சட்டமன்ற கொறடா எ.வ.வேலு பேச்சு!

**சென்னை, ஆக.27-**

**தமிழ்நாட்டில் உள்ள ஆசிரியர்களுக்குடெட் தேர்வில் விலக்கு கிடைத்திட வும், சலுகைகள் பெறுவதற்கும், நாடாளுமன்றத்தில் புதிய சட்டம் கொண்டுவர திமுக உறுதுணையாக இருக்கும். தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஆசிரியர் தகுதி தேர்வு தொடர்பான தனி தீர்மானத்தில் பேசிய சட்டமன்ற கொறடா எ.வ.வேலு குறிப்பிட்டார்.**



சட்டமன்றத்தில் ஆசிரியர் தகுதி தேர்வு தொடர்பாக ஒன்றிய அரசை வலியுறுத்தி நிறைவேற்றப்பட்ட தனி தீர்மானத்தின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சட்டமன்ற கொறடா எ.வ.வேலு பேசியதாவது:-

கடந்த திராவிட மாடல் ஆட்சியின் போதே, அப்போதைய முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் டெட் தேர்வு தொடர்பான ஆசிரியர்களின் கோரிக்கைகள் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது,

தற்பொழுது உள்ள ஆசிரியர்கள் எல்லாம் 20 ஆண்டுகளுக்கு முன்பு படித்து முடித்து பணிக்கு வந்தவர்கள், தற்போதைய டெட் தேர்வு என்பது புதிய பாடத் திட்டத்தின் அடிப்படையில் நடைபெறுவதால், தற்பொழுது உள்ள ஆசிரியர்கள் அதை எழுதி தேர்ச்சி பெறுவது மிகவும் கடினம் என்ற காரணத்தால் அப்போது சட்டமன்றத்தில் டெட் தேர்வு தேவையில்லை என்று தீர்மானம் நிறைவேற்றி அதை ஒன்றிய அரசு அனுப்பி வைத்தோம், மேலும் இது தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் அரசின் சார்பில் வழக்கு தொடரப்பட்டது, அதில் சில ஆசிரியர்களும் தங்களை இணைத்துக் கொண்டனர், ஆனால் வழக்கின் இறுதியில் சீராய்வு மனுவிலும் மற்றும் பிரதான வழக்கிலும் அளிக்கப்பட்ட தீர்ப்பில் டெட் தேர்வு அவசியம் என தீர்ப்பு வழங்கப் பட்டது,

இதையடுத்து சட்டமன்ற தேர்தல் வந்துவிட்ட காரணத்தால் தேர்தலுக்குப் பிறகு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி, அதன் அடிப்படையில் நாடாளுமன்றத்திலும் நமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் துணை கொண்டு புதிய சட்டத்தை கொண்டு வர திமுக தலைவர் ஸ்டாலின் அவர்கள் எண்ணியிருந்தார், , இப்பொழுது இங்கு கொண்டுவரப்பட்ட தனித்தீர்மானத்திலும், பணி பாதுகாப்பு மற்றும் பதவி உயர்வு உள்ளிட்டவை தொடர்ந்து ஆசிரியருக்கு தடையின்றி கிடைக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது, இந்த தனி தீர்மானத்தை திமுகழகத்தின் சார்பில் முழு மனதுடன் ஆதரிக்கிறோம், மேலும் வருங்காலத்தில் நாடாளுமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் புதிய சட்டம் கொண்டு வருவதற்கும் ஆசிரியர்களுக்கு சலுகைகளை பெற்றுத் தருவதற்கும் திமுக என்றென்றும் உறுதுணையாக இருக்கும் என்பதை இந்த அவையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு எ.வ.வேலு பேசினார்.

---

### பல்வேறு இடங்களில் ஆய்வு செய்த பிறகுதான் இடம் தேர்வு!

# பரந்தூர் விமான நிலைய திட்டத்தில் எந்த உள்நோக்கமும் கிடையாது!

## சட்டப்பேரவையில் முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு விளக்கம்!

**சென்னை, ஆக.27-**

**பல்வேறு இடங்களில் ஆய்வு செய்த பிறகுதான் இடம் தேர்வு செய்யப்பட்டது. பரந்தூர் விமான நிலைய திட்டத்தில் எந்த உள்நோக்கமும் கிடையாது என்று சட்டப்பேரவையில் முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு பேசுகையில் குறிப்பிட்டார்.**

பேரவையில் தங்கம் தென்னரசு குறிப்பிட்ட தாவது-

புதிய விமான நிலையம் அமைக்க வேண்டும் என்று முடிவு செய்த போது உடனடியாக பரந்தூரில் நாங்கள் அமைக்க முடிவு செய்யவில்லை, அதை உங்களுடன் இருக்கும் அதிகாரிகளை கேளுங்கள் அவர்களே சொல்லுவார்கள்,

சோளிங்கநல்லூர், படாளம், பன்னூர் பரந்தூர் ஆகிய இடங்களில் அதிகாரிகளுடன் சென்று ஆய்வு செய்தோம், அப்பொழுது படாளம் பன்னூர் சோழிங்கநல்லூர் ஆகிய இடங்களை ஏர்போர்ட் அத்தாரிட்டி குழுவினர் ஏற்றுக் கொள்ளவில்லை, சென்னையின் கிழக்குப் பகுதியில் கடல் உள்ளது அங்கு அமைக்க முடியாது சென்னையின் வடக்கு பக்கம் மணலி எண்ணூர் டப்பகுதிகளில் தொழிற்சாலைகள் நிறைய உள்ளது அதனால் அங்கும் அமைக்க முடியாது, தெற்கு பகுதியில் உள்ள சோழிங்கநல்லூரில் பழைய விமான நிலையம் அருகிலேயே உள்ளதால் அங்கும் அமைக்க முடியாத நிலை ஏற்பட்டது, மேலும் அனு மின் நிலையம் உள்ள கல்பாக்கம் , பறவைகள் சரணாலயம் உள்ள வேடந்தாங்கல் ஆகிய இடங்களிலும் அமைக்க முடியாத சூழ்நிலை, அதனால் தான்



பரந்தூர் தேர்ந்தெடுக்கப்பட்டது, குறைந்த அளவு பாதிக்கப்படும் மக்கள் உள்ள பகுதிகளை பார்த்து தான் இடம் தேர்வு செய்யப்பட்டது, மற்றபடி பொதுப்பணித்துறை அமைச்சர் சொல்வதைப் போல வேற எந்த உள்நோக்கமும் கிடையாது,

இறுதியாக தேர்வு செய்யப்பட்ட பரந்தூருக்கு ஒன்றிய அரசு இறுதியாக ஒப்புதல் கொடுத்தது, நீங்கள் தற்போது பரனூரரை விட்டு வேறு இடம் பார்க்க சொல்கிறீர்கள், அங்கேயும் இது போன்ற பிரச்சனைகள் வரத்தான் செய்யும்,

இத்தனை வருடங்களுக்குப் பிறகு இத்திட்டத்தை இறுதி கட்டத்திற்கு கொண்டு வந்த பிறகு இத்திட்டத்தை நீங்கள் கைவிட்டீர்கள் என்றால் இனி எப்போது இதை நிறைவேற்ற முடியும். 2,500 பேர் பட்டா வைத்து இருந்தவர்களுக்கு உரிய இழப்பீடு வழங்கி நிலத்தை கையகப்படுத்தி எல்லா வேலைகளும் முடிந்து விட்ட பிறகு இத்திட்டத்தை கைவிடுவது என்பது தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியை நிச்சயம் பாதிக்கும்.

இவ்வாறு தங்கம் தென்னரசு பேசினார்.

---

# பல்ட்டி அடித்த விஜய்!

## தி.மு.க. ஐ.டி.விங் ஆதாரத்துடன் விளக்கம்!

**தகுதின்னு சொல்லி ஏமாத்த மாட்டேன்னு சொல்லிட்டு இப்படி பல்ட்டி அடிக்கலாமா விஜய் சார்.**




---

# காங்கிரசின் கனவை தகர்த்தெறியும் த.வெ.க.!
# இனி எழுவதும் - வெல்வதும் தி.மு.கழகம்தான்!

இருக்கிறதை விட்டுவிட்டு பறக்குறதுக்கு ஆசைப்பட்டவர்களுக்குக் கிடைத்த தண்டனை போல உடன் இருந்த தி.மு.க.வை விட்டு விட்டு காவிக் கூட்டம் பெற்ற பிள்ளை எனத் தெரிந்தும், த.வெ.க.வுக்கு ஆசைப்பட்ட காங்கிரசுக்கு அவமானம் கூடுகிறது.

அரசனை நம்பி புருஷனை இழந்ததைப் போல, த.வெ.க.வை நம்பி தி.மு.க.வை இழந்து காங்கிரஸ் தவிக்கிறது.

த.வெ.க.வினர் அடுத்த பிரதமர் "விஜய்" என முழங்கியதைப் பார்த்து கலங்கி நிற்கிறது காங்கிரஸ்.

சட்டமன்றத்திலேயே, காங்கிரசார் முன்னிலையிலேயே ஆதவ் அர்ஜூனா பேசுகையில் "தென் மாநிலங்களிலிருந்து பிரதமர் ஒருவரை தேர்வு செய்ய வேண்டும்" என முதல்வர் விஜயை மனதில் வைத்துப் பேசினார்.

அமைச்சர் ஜெகதீஸ்வரி "இன்றைய முதல்வர் விஜய், அடுத்த தேர்தலில் பிரதமராவார். அதில் எந்தக் கருத்து மாறுபாடும் கிடையாது. ஒவ்வொரு வினாடியும் நாம் அனைவரும் அதை நோக்கிப் பயணிப்போம்" என்கிறார்.

அமைச்சர் ஸ்ரீநாத் பேசுகையில், "முதல்வர் விஜய் எங்கே போனாலும் போகஸ் இருக்கும். டெல்லி போனாலும் எங்கும் விஜயாகத்தான் இருக்கும்" என்கிறார்.

சேதுபதி எம்.எல்.ஏ. பேசுகையில், "வரும் 2029 லோக்சபா தேர்தலில் முதல்வர் விஜயை பிரதமராக்க மக்கள் தயாராகி விட்டனர்" என்கிறார்.

வெறும் கையில் முழம்போட ஆசைப்பட்டவன் போல, ஒரே ஒரு உறுப்பினர்கூட இல்லாத த.வெ.க. வினர் பிரதமர் பதவிக்கு ஆசைப்படுகின்றனர்.

அது ஆசை அல்ல. நாங்கள் ராகுலுக்கு பிரதமர் ஆக ஆதரவு தரவில்லை என பா.ஜ.க.வுக்கு காட்டுகின்ற கண்சாடை ஆகும்.

இவற்றை எல்லாம் கேட்டு காங்கிரஸ் கொதித்து எழுந்திருக்க வேண்டாமா? ஆனால் காங்கிரஸ் மாமன் அடிச்சானோ, மல்லிகைப்பூச் செண்டாலே என்பது போல மென்மையான மறுப்பை தருகின்றனர்.

ஒரு பக்கம் மாணிக்கம் தாகூர். "த.வெ.க.வினர் இன்னும் ரசிகர்கள் மனநிலையிலேயே உள்ளனர்" என்றும், "இந்தியா கூட்டணியில் எம்.பி. இல்லாத த.வெ.க.வை சேர்த்திட அனுமதிக்க முடியாது" என்கிறார்.

இந்தியா கூட்டணியில் 23 கட்சிகள் உள்ளன. இதில் எம்.பி.கள் இல்லாத கட்சிகளே இல்லையா? ஏன் த.வெ.க. சேரவில்லை.

கபடக்காரியின் முத்தத்திற்கு ஆசைப்பட்டு, கட்டிக்காத்த தாயின் அன்பை இழந்த காளையின் நிலையில் காங்கிரஸ் தவிக்கிறது.

கட்சி மாறும் அ.தி.மு.க. எண்ணிக்கை மாற மாற காங்கிரசு மாப்பிள்ளைக் கணக்கா திண்ணையில் இருமிக் கொண்டிருக்க வேண்டியது தான்.

இரண்டு அமைச்சர் என்கிற லட்சங்களை பெரியதாக நினைத்து. "ராகுல் பிரதமர்" என்கிற லட்சியக் கனவுகளை கோட்டை விட்டனர் தமிழக காங்கிரசினர்.

காங்கிரசை ஓரங்கட்டத்தான், செங்கோட்டையன் 10 அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் த.வெ.க.விற்கு வரத் தயாராக இருக்கிறார்கள் என்கிறார்.

47ல் 6 நபர்கள் விலகினாலும் இன்று இருக்கும் ஏறத்தாழ 41 பேரில் 3-ல் 2 பங்கு இருந்தால் தான் கட்சிமாறுதல் செல்லும். ஆனால் 10 பேர் வருகிறார்கள் என செங்கோட்டையன் கூறுவது சட்டத்தினை ஜனநாயகத்தினை காலில் போட்டு மிதிப்பதற்குச் சமம். இதற்காகவே செங்கோட்டையனிடம் இருக்கும் அமைச்சர் பொறுப்பைப் பறிக்க வேண்டும்.


இருக்க இடம் இல்லை, படுக்கப் பாய்கேட்ட கதையாய்ச் சட்டமன்றத்தை ஒழுங்காக நடத்தத் தெரியவில்லை. ஒரு அமைச்சர்கூட இலாகா பற்றி பேசுவது இல்லை. இந்த லட்சணத்தில் பிரதமர் பதவி மீது ஆசையாம்.

40 எம்.பி.க்களை வெற்றி பெற வைத்த தளபதி மு.க. ஸ்டாலின்தான். முதன் முதலில் "பாரதப் பிரதமர் வேட்பாளர்" என "ராகுலை" அறிவித்தார். இந்தியா கூட்டணியை உருவாக்கினார். இந்தியா கூட்டணியில் பெரும்பகுதி கட்சியினரை சமாதானம் செய்து "ராகுல் பிரதமர்" என முழக்கமிட்டார் தளபதி ஸ்டாலின். தளபதியை ஒருபோதும் பிரதமர் என தி.மு.க.வினர் சொல்லிக் கொண்டதே இல்லை.

எங்கே விஜயினை, "அடுத்த பிரதமர் வேட்பாளர் ராகுல்" என அறிவிக்கச் சொல்லுங்கள் பார்க்கலாம்.

அத்தைக்கு கூட மீசை முளைக்கும். விஜயிடம் இருந்து ராகுல் பிரதமர் என்கிற வார்த்தை வராது.

அமைச்சர் நிர்மல்குமார், லோக்சபா தேர்தல் முடிந்து த.வெ.க.விற்கு எம்.பி.க்கள் கிடைத்தபின் இந்தியா கூட்டணியில் செயல்படுவது குறித்து முடிவெடுக்க முடியும் என்கிறார்.



கவிஞர்
**காசிமுத்து மாணிக்கம்**
(கழக வர்த்தகர் அணிச் செயலாளர்)

அப்படி என்றால் வரும் 2029 தேர்தலில் இந்தியா கூட்டணி இல்லை. தனித்துத் தான் நிற்போம். வென்றதற்குப் பிறகு யோசிக்கலாம் என்கிறாரா அமைச்சர் நிர்மல்குமார். அப்படி என்றால் தமிழகத்தில் காங்கிரஸ் கூட்டணிக்கு 39 சீட்டு என்பதற்குப் பதில் ஜீரோதான் என்கிற மாதிரிதான் என்கிறார். எதிர்த்துப் பேச வேண்டிய காங்கிரசார் மௌன கீதம் பாடுகின்றனர்.

நிர்மல் குமார் சொல்கிறார். தி.மு.க.வினர் அறிவாலயத்தை வாடகைக்கு விடணுமாம். அறிவாலயத்தின் செங்கற்களைக் கூட வாடகைக்கு வாங்குவதற்கு எவருக்கும் சக்தி இல்லை. வாடகைக்கு விடுவதற்கும். விற்பதற்கும் தி.மு.க.வில் நூற்றுக்கணக்கான அறிவாலயங்களும், அடிப்படை அரசியல் கூட்டமும் இருக்கின்றன. உங்கள் பாட்டனால்கூட அதைச் சாதிக்க முடியாது.

ஆனால் த.வெ.க.விற்கு விற்பதற்கு என என்ன உள்ளது? சென்னையில் தலைமைக் கட்டிடம் இருக்கிறதா? தி.மு.க.விற்கு முரசொலி இருக்கிறது. த.வெ.க.விற்கு தினசரி இதழ் இருக்கிறதா?

தி.மு.க.விற்கு கலைஞர் டி.வி. இருக்கிறது. த.வெ.க.வுக்கு என்ன இருக்கிறது?

எதிர்த்த வீட்டுக்காரருக்கு எட்டுப் புள்ள இருக்கிறது என மலடி மல்லாந்து படுத்துகிட்டு கத்தினாளாம், அதுபோல உள்ளது அமைச்சர் நிர்மல்குமாரின் பேச்சு.

எதிர்க்கட்சிக்காரர்களும் பெருமைப்படும் அளவுக்கு அரசியல் செய்யாமல், மூன்றாம் தர பேச்சாளர்கள் போல் அச்சில் ஏற்றிட தகுதி இல்லாத வார்த்தைகளைத் த.வெ.க.வினர் பேச வேண்டாம்.

வீழ்வது அவர்களது வெற்றிக்கழகம்தான்!

இனி எழுவதும் வெல்வதும் தி.மு.கழகம் தான்!!

---



சென்னை வடகிழக்கு மாவட்டம், திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கிழக்கு பகுதி மாவட்டப் பிரதிநிதி ஆர்.ரஜினிபாபு இல்லத் திருமண வரவேற்பு விழா நடைபெற்றது. இதில் சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் இளைஞர் அணி நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.